1969 மார்ச் 26]

திருச்சியில் இப்பொழுது 400 படுக்கைகள் கொண்ட அரசாங்க மருத்துவ மனை ஒன்று இருப்பதன் காரணமாக, அங்கு ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்று நினைத்து, மத்திய சர்க்காருக்கு திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வகை இருக்கிறது என்று எழுதியிருக்கிறேம். ஆனுல், மத்திய சர்க்காரிடமிருந்து அதற்கும் இதுவரையில் எந்த விதமான பதிலும் வரவில்லை. பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது, சேலத்தில் மத்திய அரசாங்கத்தின் சார்பில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தப்போவதாக. ஆனுல், அதிகாரபூர்வமாக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மாநில அரசுக்கு எதுவும் வரவில்லை. திருச்சியில் கூட தனியார்கள் திரு எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி செட்டியார், மானேஜிங் டிரஸ்டி, உருமு சேஷாசலம் செட்டியார் சாரிடிஸ் ரூ. 5 லட்சம் நன்கொடை கொடுத்து, 40 எக்கர் நிலமும் நன்கொடையாக, இனுமாகக் கொடுத்து, ஒரு மருத்துவக் கல்லூரி திருச்சியில் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிருர்கள். பொது மக்கள் ரூ. 15 லட்சம் அளவுக்கு நன்கொடையாக வசூல் செய்து தருவதாக உறுதி கூறியிருக்கிருர்கள். இவைகளையெல்லாம் வைத்து அரசாங்கம் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது. மாநில அரசின் சார்பில் திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கலாமா என்பதையெல்லாம் பற்றிப் பரிசிலனை நடக்கிறது.

Sanitary Inspector's Course.

***480 *Q.*—Thiru N. S. V. CHITHAN ; Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the number of seats available in different Medical Colleges for the Sanitary Inspector's Course in this State ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :—

மருத்துவக் கல்லூரியின் பெயர்.	இடங்களின் எண்ணிக்கை.
(1)	(2)
1. சென்னை மருத்துவக் கல்லூரி	50
2. ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி	100
3. மதுரை மருத்துவக் கல்லூரி	100
4. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி	50
5. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி	50
மொத்தம் .	350

திரு. என். எஸ். வி. சித்தன் : இவற்றை உயர்த்துவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இவைகளை உயர்த்துவதாக இல்லை. இது தவிர, காந்தி கிராம் ரூரல் இன்ஸ்டிட்யூட்டில் 30 இடங்கள் இருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : சானிடரி இன்ஸ்பெக்டர்ஸ் டிரெயினிங் கோர்ஸுக்கு டிபார்ட்மெண்டல் காண்டிடேட்ஸ் ஒரு சிலர் வருகிருர்கள். அவர்களுக்கு டிரெயினிங் ஆனதும் வேலை கிடைத்துவிடுகிறது. சானிடரி இன்ஸ்பெக்டர்ஸ் கோர்ஸுக்கு டிரெயினிஸாக டைரக்ட் ரெக்ரூட்மெண்டு செய்யப்படுபவர்களுக்குப் பெரும்பாலும் வேலை கிடைக்காத நிலைமை இருக்கிறது, அதைப்பற்றி ஏதாவது அரசாங்கத்திற்குத்

தெரியுமா ? அப்படியிருந்தால், எத்தனை பேர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை என்ற புள்ளி விவரம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : டிபார்ட்மெண்டல் காண்டிடேட்ஸ் 60 சத வீதம், லோகல் பாடீஸ், உள்ளாட்சி மன்றங்களிலிருந்து 25 சத வீதம், ஓபன் மார்க்கெட், யாரை வேண்டுமானாலும் நேரடியாக எடுத்துக்கொள்வது என்ற வகையில் 15 சத வீதம் என்று அறிவிப்பு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். அடிஷனல் டைரக்டர் ஆஃப் ஹெல்த் சர்வீஸஸ் அண்டு பாமிலி பிளானிங் தான் இவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எல்லா வகையிலிருந்தும் காண்டிடேட்ஸ் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்படுகிற காரணத்தினால், வெளியிலிருந்து தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்குள்ள தகுதி இருக்குமானால் யாரும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வசதி இருக்கிறது.

வெள்ளிக் குறியிடாத வினாக்கள்.

Teacher-Pupil ratio in schools.

41 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

Whether all the schools in Tamil Nadu have been instructed to admit 55 students for each section so that the pupil-teacher ratio may be 55: 1.

A.—No.

இல்லை.

Evening Courses in Queen Mary's College, Madras.

42 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) The number of students who are attending the evening course in the Queen Mary's College, Madras ; and

(*b*) Whether there are separate lectures for them ?

A.—(*a*) 106.

(*b*) Additional posts of teaching staff have been sanctioned by Government at the time of starting the evening course to meet increased work load. They are, however, not treated as exclusively belonging to the evening course. Their services are also utilised for teaching the corresponding subjects in the regular course in the same way as teachers of regular course work in the evening course, subject to the work load of each of the number not exceeding the maximum prescribed by the University.

(அ) 106.

(ஆ) மாலைநேரப் படிப்பு தொடங்கிய பின்னர் வேலைச்சுமை அதிகரித்ததை ஈடு செய்ய அரசு கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. முறையான கல்லூரிகளில் மாலை நேரப் படிப்பு கற்பிக்கப் பயன்படுத்தப்படுவதைப் போலவே இவர்களும் மாலை நேர வகுப்புகளுக்கு மட்டுமின்றி முறையாகக் காலையில் நடக்கும் வகுப்புகளிலும் அவரவர்களுக்குரிய பாடங்களைக் கற்பிக்கவும் பயன்படுத்தப்படுகிறார்கள். ஆனால், இத்தகைய ஆசிரியர்களின் வேலைச்சுமை பல்கலைக் கழகத்தால் வரையறுக்கப்பட்டதற்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைக்கு இது உட்பட்டதாகும்.